[பேரவைத் தலைவர்] [2015 பிப்ரவரி 23

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

7. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2015 ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2015), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-50

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாலகிருஷ்ணன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (திருத்தச்) சட்டமுன்வடிவு இந்த அவையிலே நிறைவேற்றப்பெற்றது. உள்ளாட்சி மன்றங்களிலே நடைபெறுகிற முறைகேடுகள் குறித்து விசாரித்து உரிய நடவடிக்கை

@ 23-2-2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மேற்கொள்வதற்காக இந்த Ombudsman நியமிக்கப்படுகிற சட்டமுன்வடிவு வரவேற்கப்பட்டது. ஆனால், இப்போது அரசுச் செயலாளர் படி நிலைக்குக் குறையாமல் இருந்த, அதாவது, ஓய்வு பெற்ற ஒருவரை அந்தப் பணி நிலைக்கு அமர்த்துவதற்கான வாய்ப்பு இந்த சட்டத் திருத்தத்தின்மூலம் தரப்படுகிறது. இது நீதிமன்றத்திற்கு நிகரான ஓர் அமைப்பு என்கிற காரணத்தினால், பணியில் இருக்கிற தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் படி நிலைக்குக் குறையாமல் இருக்கிற ஒருவரை நியமிப்பது என்பதுதான் பொருத்தமானதாக இருக்கும். 'இருந்த' என்று சொல்லி ஓய்வு பெற்ற ஒருவரை நியமிப்பதற்கான இந்த சட்டத் திருத்தத்தை ஆய்வுக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012 முதல் 2015 வரையிலான காலத்திற்கான மத்திய அரசு வழங்கும் பொது செயல் நிதியினைப் பெறுவதற்காக 13-வது மத்திய அரசு ஆணையம் பிறப்பித்த நிபந்தனைகளின்படி, உள்ளாட்சி அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின்மீதான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக முறைமன்ற நடுவர் அமைப்பு முறையை, Ombudsman ஏற்படுத்த அவசரச் சட்டம் ஒன்று மேதகு ஆளுநரால் 12-11-2014 அன்று பிறப்பிக்கப்பட்டு, 13-11-2014 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டது. இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவிலுள்ள (2) ஆம் உட்பிரிவின்படி, முதலமைச்சரின் ஆலோசனையின்பேரில், ஆளுநரால் தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் படி நிலைக்குக் குறையாமல் அரசு அலுவலராக இருந்திருக்கிற நபர் ஒருவர் முறைமன்ற நடுவராகப் பணியமர்த்தம் செய்யப்படலாம் என்பதன்படி, முறைமன்ற நடுவராகப் பணியமர்த்தம் செய்யப்பட்ட நபர் பதவியேற்றதிலிருந்து 3 ஆண்டு காலத்திற்கு அல்லது 70 வயது வரை அப்பதவியை வகிக்கலாம். தகுதியுடைய அலுவலர்கள் அதிக அளவில் கிடைக்கப்பெற்று, அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து முறைமன்ற நடுவராகப் பணியமர்த்தம் செய்வதற்கு ஏதுவாக' தமிழ்நாடு அரசின் அரசுச் செயலர் படி நிலைக்குக் குறையாத அரசு அலுவலரொருவராய் இருந்த மற்றும் / அல்லது இருந்திருக்கிற நபர் ஒருவர் முறைமன்ற நடுவராகப் பணியமர்த்தம்

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2015 பிப்ரவரி 23

செய்யப்படுதல் வேண்டும் என அரசு கருதுகிறது. இந்நோக்கத்திற்காக மேற்கூறிய சட்ட உட்பிரிவில் திருத்தம் செய்யலாம் என அரசு முடிவு செய்து, இப்பேரவையின்முன் வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இதை ஏற்றுக்கொண்டு இச்சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்குப் பிறகு நீங்கள் வாய்ப்பு கேட்கிறீர்கள். (குறுக்கீடு) முன்பே அனுமதி கேட்டிருந்தால் நான் கொடுத்திருப்பேன். பதில் சொன்னதற்குப் பின்பு வாய்ப்பு கேட்கிறீர்கள். (குறுக்கீடு)

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெற்றவர்களைப் பணியில் அமர்த்தலாம் என்பதை 'கூடாது' என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி இருந்தால் அதை Select Committee-க்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னார். ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதிகாரிகளைப்பற்றிக் கூறியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதிகாரிகளைப்பற்றி இப்படியெல்லாம் சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: இது விவாதிக்கிற இடம் இல்லை. இது விவாதிக்கிற பொருள் அல்ல. (குறுக்கீடுகள்) ஓய்வு பெற்றவர்களை நியமிக்கக் கூடாது என்கிறீர்கள். இல்லாதவர்களையும் நியமிக்கலாம் என்பதற்கு மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்லி இருக்கிறார். அந்த விளக்கத்தை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஓய்வுபெற்றவர் மட்டும்தான் நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதுபோல தவறாகப் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) விளக்கம் சொன்னதற்குப்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2015 பிப்ரவரி 23] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

பிறகு குதர்க்கமாகப் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) இது தேவையில்லாத விவாதம். ஓய்வு பெற்றவரை நியமிக்கக் கூடாது என்பது மட்டுமல்ல; பணியில் இருப்பவரையும் நியமிக்கலாம், ஓய்வு பெற்றவரையும் நியமிக்கலாம் என்பதற்கு விளக்கமும் சொல்லிவிட்டார். அதற்குப் பின்பும் நீங்கள் குதர்க்கமாகப் பேசுவது மாதிரி, தேவையில்லாத பிரச்சினையை விவாதிப்பது சரியான முறையல்ல. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-55

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஓர் அரசு எடுக்கின்ற முடிவை கேள்வி கேட்க இவர்களுக்கு உரிமை இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு எடுக்கின்ற முடிவை. (குறுக்கீடுகள்) **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை, அவைக் குறிப்பிலிருந்து அவை நீக்கப்பட்டுவிட்டன. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோக்கக் காரண விளக்க உரையில். நீங்கள் சொல்வதுபோல் ஏற்கனவே இருந்ததை மாற்றவில்லை. ஏற்கனவே இருந்ததுதான். அதாவது, நோக்கக் காரணங்களை நன்றாகப் பார்த்துக்கொள்ளுங்கள். 'இருந்திருக்கிற நபர் ஒருவர்' என்று இருக்கிறது. அதாவது, 'இருந்த மற்றும் / அல்லது இருந்திருக்கிற நபர்' என்று உள்ளது. எனவே, இப்போது இருப்பவரும் இருக்கலாம், ஓய்வுபெற்றவரும் இருக்கலாம். அதாவது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 பிப்ரவரி 23

இருந்த மற்றும் இருந்திருக்கிற நபர். இருந்திருக்கிற நபர் என்றால் கடந்த காலத்தில் இருந்திருக்கின்ற ஓய்வுபெற்ற அரசுச் செயலர். (குறுக்கீடுகள்) இல்லை, இரண்டு பேருமே இருக்கலாம். இடையே stroke போட்டிருக்கின்றது. அதை நன்றாகப் பார்த்துக்கொள்ளுங்கள். ஏற்கெனவே இருந்த சட்டமும் ஓய்வு பெற்றவரை. . . (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: தேவை இல்லை. Select Committee-க்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை. ஏற்கெனவே உள்ள சட்டமும் ஓய்வு பெற்றவரை நியமிக்க வழிவகை செய்தது. இதில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2015 பிப்ரவரி 23] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2015 பிப்ரவரி 23

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS